# இன்பத்தமிழ்

“யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழியைப் போல் இனிதாவது எங்கும் காணோம்.” என்று சுப்பிரமணிய பாரதியார் கொடியேற்றி வைத்து தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்ய வேண்டும். என்று கட்டளையிட்டார்.

“தேன்மதுரத் தழிழோசை” என்று அவர் குறிப்பிட்டது என் இன்பத் தமிழைத்தான்.

தேனிலும் மதுரம் இன்பத்தமிழ். புலவர்களும், மேதைகளும் விலை மதிக்க முடியாத இந்த இன்பத்தமிழை எம்மை போன்ற சிறுவர் படித்து அறிந்து இன்பமடைய வழி வகுத்தனர்.

கம்பர், வள்ளுவர், இளங்கோ என்று சுப்பிரமணிய பாரதி சுட்டிக்காட்டுவது அவர்கள் கட்டிக்காத்த இன்பத்தையும், தமிழ் மொழியில் கண்ட தெய்வீகத்தையும் தான். அவர்கள் தோன்றி மறைந்தனரே தவிர அவர்கள் நுகர்ந்த இன்பத்தமிழ் சுவை மணம் குறையவில்லை. சுவையும் மாறவில்லை.

என் தாய் கர்ப்பத்தில் குடி புகுந்தது முதல் இந்த இன்பத்தமிழ் என் உயிரோடு சேர்ந்து வளர்ந்தது. என் நாபியோடு தன்னைப் பிணைத்துக் கட்டிக் காத்து ஒவ்வொரு முறையும், இன்பத்தமிழை அவள் பாலோடும், சோறோடும் என்னோடு பகிர்ந்துண்டாள். நான் வளர வளர இடை பெருகப் பெருக அந்த இன்பத் தமிழ்தான் நான் கேட்ட இரகசிய மொழி. ‘அம்மா’ என்று என் அன்னை தன் இடுப்பு வலியைப் போக்க திணறும் போதும், நான் குடியிருந்த வயிற்றை அவள் தடவிக் கொடுத்து சுகம் பெறும் போதும், அம்மா, அப்பா, சுவாமி என்று இன்பத்தமிழைத் தான் நான் கேட்டேன். என் உயிரோடு அதை சேர்த்துப் பிணைத்தார் என் தாய்.

நாங்கள் தனிமையாயிருக்கும் போது .... ‘என் செல்லமே’ என்று தேனொழுக இரகசியம் பேசுவாள். அந்த இனிமையில் மயங்கி விடுவேன். ஓகோ... இதுதான் இந்த ‘இன்பத்தமிழா!’ என் தாய் மொழியல்லவா! என்று வியப்பில் ஆழ்ந்து விடுவேன். ‘என்ன அம்மா’? என்று வினாவ வேண்டும் என்று துடிப்பேன். என் குரல் எழும் போது காலையும் கையையும் தான் அசைப்பேன்.

இறை வணக்கம் பாடிப் பாடி அந்தப் பாதையிலேயே நான் செல்ல வேண்டும் என்ற ஆவலில் அவள் இன்பத்தமிழில் கரங்குவித்து கடவுளிடம் மன்றாடுவாள். ‘அம்மா உன் ஆசையை உன் ஆசியோடு நான் நிறைவேற்றுவேன்’ என்று அவள் கர்ப்பத்திற்குள் என் இருட்டறையில் சபதம் செய்தேன்.

துன்பத்தை அழிப்பது இன்பம். அதை நிறைவேற்ற என் தாய் மொழியான இன்பத்தமிழுக்கு மட்டுமே சக்தியும் உரிமையும் உண்டு. இன்பத்தமிழ் சுவையான கனி. தமிழ்ப்பற்று ஊக்கம், கடவுள் பக்தி, குருபக்தி, பெற்றோர்

பக்தி முதலிய நற்கனிகளைப் பிழிந்டுெத்த பழச்சாறு இன்பப்பானம் என் தாய் மொழி. இதற்கு இன்பத்தமிழ் என்று நாமகரணம் சூட்டுவதில் ஐயமில்லையே.

எண்ணற்ற புலவர்களும் தமிழை உயிரினும் மேலாக மதித்த அறிவாளிகளும் இன்பத்தமிழை போற்றி வளர்த்தனர். பாரதியார் தமிழைப் போற்றிப் புகழும் போது,

உள்ளத்தில் உண்மை ஒளியுண்டாகும். - வாக்கினிலே ஒளியுண்டாகும்

வெள்ளத்தின் பெருக்கைப் போற் கலைப் பெருக்கும் கல்விப் பெருக்கும் மேவுமாயின்

பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம் விழி பெற்றுப் பதவி கொள்வார்.

தெள்ளுற்ற தமிழமுதின் சுவை காண்பார். இங்கமரர் சிறப்புக் கண்டார்.

என்று எத்தனை அழுத்தமாக இன்பத்தமிழைப் பற்றி பாடிச் சென்றார். தமிழரை தட்டியெழுப்பி இன்பங்கள் கண்டார். நாட்டு வணக்கம், தேச மாதா புகழ்ச்சி, தேசபக்தர், வாழ்த்து, மானிட சுதந்திர தாகம், மேல் நாட்டுக்கு வந்தனம், பெண்மையின் பெருமை, மொழி வாழ்த்து, தெய்வங்களை நண்பன், காதலன், புதல்வன், காவலன் போல் பாவனை, பாப்பாபாட்டு இப்படி எத்தனையோ பாடல்களை 19ம் நுற்றாண்டில் பிறந்து 20ம் நூற்றாண்டில் மறைந்த சுப்பிரணிய பாரதியார் நமக்கு விட்டுச் சென்றது இன்பத்தமிழில் தான். இது நம்முடைய அதிஸ்டம் என்று தான் சொல்ல வேண்டும். இதை நாம் பெற்றோம் என்ற பெருமிதம் மாத்திரம் போதாது. அதை நாம் கட்டிக் காப்பாற்றி தலைமுறை தலைமுறையாக பகிர்ந்து கொள்ள வேண்டும். “தேன்மதுரத் தமிழோசை உலமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்”.

நம் முன்னோர்கள் கண்ட இன்பக்கனவை உண்மையாக்க வேண்டுமானால் தமிழ் மொழியை, நம் தாய் மொழியை இன்பத் தமிழ் மொழியை உயிரிற்கும் மேலாக ஏற்றுக் கொண்டு கற்றுக் கொள்ள வேண்டும். தமிழறிவு இருந்தால் தான் இன்பத்தமிழில் பொதிந்திருக்கும் ஆழ்ந்த உண்மை, அழகு, நீதி, ஆத்ம திருப்தி எல்லாவற்றையும் அனுபவிக்கலாம்.

தமிழுக்கு அமுதென்று பெயர் அந்தத்தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கும் மேல்.

நன்றி வணக்கம்.